[1987 நவம்பர் 13

கொசுக்களை அழிக்கும் மூலிகைகள்

94—(*வினா எண் 3022)—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொசுக்களை அழிக்கும் மூலிகைகள் ஏதேனும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆம் கொசுக்களை அழிப்பதற்கு பைரத்ரம் என்னும் மூலிகையிலிருந்து பைரத்ரம் என்னும் பூச்சி கொல்லி மருந்து தயாரிக்கப்படுகிறது.

ஆக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பெண் மருத்துவர்.

95—(*வினா எண் 3803)—திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு வருட காலமாக பெண் மருத்துவர் இல்லாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): ஆக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு பெண் மருத்துவர் 17—6—1987 முதல் பணிபுரிந்து வருகிறார்.

கண் கொடையளிப்போர்

96—(*வினா எண் 4548)—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண் கொடையளிப்போர் எத்தனை பேர் தயாராக உள்ளனர் ?

(ஆ) அவைகள் சேமிக்கும் இடங்கள் எங்கெங்கு உள்ளன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சென்னையிலுள்ள அரசு கண் மருத்துவமனையில் 2,107 நபர்களும், மதுரையிலுள்ள இராஜாஜி மருத்துவ